**O.S.No. 120/2018**

**DW1 :** வெங்கடேசன் தேதி 20.11.2025

**பி.வா.சா.1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.1 க்கான முத்திரை தாள் பத்திரம் எழுதுவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக வாங்கினேன் என்றால் 3 நாட்களுக்கு முன்பாக வாங்கினேன். பத்திரம் எழுதுவதற்கு என் பெயரில் ஆவணங்களை தயாராக வைத்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடுபவர்களுக்கு எழுதுவதற்கு முன்பாகவே சொல்லிவிட்டேன் என்றால் எழுதுவதற்கு முந்தைய நாள் ராஜம்மாள் சொன்னார். ஓ.கே.நாச்சிமுத்து முதலியாருக்கு வளர்ப்பு மகன் என்ற முறையில் நான் தான் அவருக்கு தேவையான உதவிகளையும், ராஜம்மாளுக்கு தேவையானவற்றையும் பூர்த்தி செய்து வந்ததாக சொல்கிறேனா என்றால் அவ்வாறு தான் சொல்கிறேன். ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியார் விபத்தில் இறந்துவிட்டாரா அல்லது கோவிலுக்கு சென்ற போது இறந்தாரா என்றால் மாரடைப்பினால் மருத்துவமனையில் இறந்துவிட்டார். 19.03.1994 ல் இறந்த பிறகு ஈரோட்டில் வைத்து வளர்ப்பு மகன் என்ற முறையில் கொள்ளி வைத்து இறப்பு சடங்குகள் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் தான் செய்தேன். ஓ.ஏ.கே.நாச்சிமுத்துவின் மகன் சண்முகவேலாயுதம் தான் கொள்ளி வைத்து ஈமக் காரியம் செய்தார் என்றால் சரியல்ல நான் தான் செய்தேன். மேற்படி ஈமச்சடங்கு செய்ததற்கான ஈரோடு மாநகராட்சி ஈமக்கிரியை மற்றும் மயானத்தில் விண்ணப்பம் கொடுத்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது தற்போது என் கைவசம் இல்லை. ஈரோடு மாநகராட்சிக்கு நீதிமன்றம் மூலம் சம்மன் அனுப்பி மேற்படி ஈமச்சடங்கு செய்தவர் யார் என்று விண்ணப்பத்தை வரவழைத்து பார்க்கலாமா என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை. நாச்சிமுத்து முதலியார் இறந்த பின்னிட்டு டீச்சர்ஸ் காலனியில் உள்ள 6000 சதுரடியை அவரது மருமகன் சந்திரசேகரனுக்கு ராஜம்மாள் பவர் கொடுத்தாரா என்றால் மருமகன் என்ற முறையில் கொடுக்கவில்லை, பெரிய மாமியார் என்ற முறையில் பவர் கொடுத்தார். சந்திரசேகரன் ராஜம்மாளுக்கு மருமகனா என்றால் இல்லை, மருமகன் என்ற உறவுமுறை. பவர் பத்திரத்தில் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ள அதிகாரம் கொடுத்து இருந்தார் என்றால் இல்லை. மேற்படி பவர் பத்திரம்

ராஜம்மாள் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியும், அதை நான் ஆட்சேபணை செய்யவில்லை. மேற்படி பவர் பத்திரம் நடைமுறைக்கு வந்து அதன் அடிப்படையில் கிரயம் ஆனது என்றால் சரிதான், ஆனால் பவானி சார்பதிவாளர் அலுவலகத்தில் வேறு ஒருவர் பெயரில் கிரயம் ஆனது. நான் வங்கியில் கடன் வாங்கிய அனைத்து ஆவணங்களிலும் என்னுடைய வளர்ப்பு தந்தை ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியார் பெயரில் எதுவும் இல்லை என்றும், எனது தந்தை பரமசிவம் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 பக்கம் 2 ல் பாரா 5 ல் தத்துபிள்ளை என்று உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை, **தத்துபிள்ளை என்று பாவித்து** என்ற வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ல் பக்கம் 1 ல் நீ என்னுடைய வளர்ப்பு மகன் என்ற வாசகம் உள்ளதா என்றால் சரிதான், நான் வளர்ப்பு மகன் தான். வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள கட்டிடங்கள், மின் இணைப்பு மற்றும் சொத்து வரி ஆகியவை நாச்சிமுத்து முதலியாரால் கட்டப்பட்டு வந்தது என்றால் ஒரு வீடு மட்டும் அவர் கட்டி வந்தார், மீதி கட்டிடங்களை நானும், ராஜம்மாளும் கட்டினோம். நாச்சிமுத்து முதலியார் இறந்த பின்னிட்டு 1994 க்கு பின்னிட்டு நான் கட்டிடம் கட்டியதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் தாக்கல் செய்து இருக்கிறேன். ராஜம்மாள் கட்டினார் 09.01.2012 ல் எனக்கு எழுதி கொடுத்தார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 13 ல் பாரா 25 ல் நான் தான் கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன் அது சரியா என்று சொன்னால் ராஜம்மாளின் அனுமதியின்படி நான் கட்டினேன், வாடகைக்கு விட்டேன். எந்த இடத்திலும் ராஜம்மாள் சொத்துவரி, மின் கட்டணத்திற்கான வைப்பீடு ஆகியவற்றிற்கு விண்ணப்பம் கொடுத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் ராஜம்மாள் அதற்கான விண்ணப்பம் கொடுத்தார்.அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். 6 மாத குழந்தையாக இருக்கும் போதே நாச்சிமுத்து முதலியார் வீட்டில் வளர்ந்ததாக மற்றும் அவர் வீட்டில் நான் இருந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்ய இருக்கிறேன். 2018 ம் வருடம் வாதியின் மகன் அமர்நாத் அவருடைய பாட்டி ராஜம்மாளை பார்க்க வந்த போது அவரை தடை செய்து பிரச்சினை ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் அவரிடம் சொத்துக்கள் என் பெயரில் உள்ளதால் வரக்கூடாது என்று தடை செய்தேன் என்றும், பின்னிட்டு நகல் போட்டு பார்க்கும் போது மோசடியாக நான் ஒரு ஆவணத்தை ராஜம்மாளின் வயோதிகத்தை பயன்படுத்தி பொய்யாக தயாரித்து

கொண்டது தெரிய வந்ததும் என்று சொன்னால் சரியல்ல. 2012 லேயே ஆவணம் விபரம் அனைத்தும் அமர்நாத்க்கு தெரியும். ராஜம்மாள் 2019 ல் இறந்துவிட்டார். அவருக்கு வாரிசு அடிப்படையில் ஈம சடங்கு யார் செய்தது என்றால் நான் தான் செய்தேன், அதற்கு ஆவணம் உள்ளது, அதை தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நாச்சிமுத்து முதலியார் இறக்கும் போது நான் ஈமசடங்கு செய்ததற்கான ஆவணம் எதுவும் இல்லை, ராஜம்மாளுக்கு நான் ஈம சடங்கு செய்ததற்கான ஆவணம் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் போது நல்ல மன நிலையில் திடகாத்திரமாக உட்கார்ந்திருந்ததற்கான புகைப்படத்திற்கான சி.டி பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டதா என்றால் அந்த காலகட்டத்தில் அது நடைமுறையில் இல்லை. பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் போது ராஜம்மாளின் பான் கார்டு மட்டும் தான் கொடுத்தேன். அந்த பான் கார்டில் கண்டுள்ள புகைப்படம் மற்றும் பதிவு அலுவலகத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தை நான் அடையாளப்படுத்தி காட்டினேனா என்றால் நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து எதுவும் இடவில்லை. முகவரியுடன் கூடிய அடையாள அட்டை ராஜம்மாளுடையதை பதிவுக்கு பயன்படுத்தப்பட்டதா என்றால் பான் கார்டு மட்டும் தான் கேட்டார்கள், அதை கொடுத்தோம். பதிவாளர் அலுவலகத்தில் தரப்பினர்களை இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ள சாட்சிகள் எங்கள் வீட்டிற்கு வர போக உள்ளவர்களா என்றால் அவர்கள் ராஜம்மாளுக்கு வேண்டபட்டவர்கள், உறவினர்கள் அல்ல. நாச்சிமுத்து முதலியாரின் நண்பர்கள். நாச்சிமுத்து முதலியாரின் ரத்த வழி உறவினர்கள் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் எதுவும் இடவில்லை என்று சொன்னால் ராஜம்மாள் யாரை சாட்சி கையெழுத்திடும் படி கேட்டுக்கொண்டாரோ அவர் தான் போட்டார். இடது கை பெருவிரல் ரேகையை யார் விரலை பிடித்து அழுத்தி கைரேகையை பதிவு செய்தார்கள் என்றால் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள அலுவலர் தான் கைரேயை பதிவு செய்தார். பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்கள் வீட்டிலேயே கையெழுத்திடப்பட்டதா என்றால் பதிவாளர் அலுவலக வராண்டாவில் டெஸ்கின் மீது வைத்து கையெழுத்து போடப்பட்டது. அவ்வாறு கையெழுத்திடும் போது பத்திர எழுத்தர் சரவணன் உடன் இருந்தாரா என்றால் இருந்தார். பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். பத்திரம் தயாரித்து கொடுத்த சரவணன் அங்கீகாரம் பெற்ற பத்திர எழுத்தரா என்றால் ஆமாம். பதிவு செய்யப்பட்ட பத்திர எழுத்தராக உள்ள நிலையில் சரவணன் தான் பத்திரம் தயாரித்தாக கையெழுத்திட்டு சீல் வைத்து பத்திர பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால்

சரிதான். மேற்படி ஆவணத்தில் Prepared by self என்ற இடத்தில் ராஜம்மாள் கையெழுத்திட்டுள்ளார். வா.சா.,ஆ.1 பத்திரம் எழுதும் போது ராஜம்மாளின் வயது 87 என்றால் 85 வயது இருக்கும். வா.சா.ஆ.1 ன் போது ராஜம்மாளுக்கு காது கேட்காது, படித்து காட்டினால் தான் தெரியும் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. நானும், ராஜம்மாளும் பேசி கொள்ளும் விதம் அவர் பேப்பரில் எழுதி காட்டுவார் என்றால் சரியல்ல. 2012 ல் ராஜம்மாளை எந்த மருத்துவமனையில் சிகிச்சை அளித்ததாக மருத்துவ ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் 2012 ல் அவர் நலமுடன் தான் இருந்தார். வா.சா.ஆ.1 ல் ராஜம்மாள் தான் கையெழுத்து செய்துள்ளார் என்பதை தெரிந்து கொள்ள அவரது கையெழுத்து உள்ள வேறு ஆவணத்தை ஒப்பிட்டு பார்க்க ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை இல்லை. 2012 க்கு முன்பு ராஜம்மாள் கையெழுத்து செய்த ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. என்னென்ன ஆவணங்கள் உள்ளது என்றால் வருமானவரி செலுத்தியதற்கான அக்கவுண்ட் ஸ்டேட்மெண்ட் ஆடிட்டர் தயார் செய்து கொடுத்ததில் அவர் கையெழுத்து உள்ளது. வங்கி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் உள்ளது. வியாபாரத்தில் ராஜம்மாள் கையெழுத்து செய்த பதிவேடுகள் உள்ளதா என்றால் இருக்கலாம். மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். 1980 ல் இருந்தே 2012 க்கு முன்பு வரை உள்ள ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். வா.சா.ஆ.1 ல் ராஜம்மாளின் கையெழுத்தையும், நான் தாக்கல் செய்ய போகும் உள்ள கையெழுத்தையும் கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை இல்லை.

வாதி தரப்பு வழக்கறிஞர் கையெழுத்து நிபுணருக்கு ஆவணங்களை அனுப்ப கேட்டுக் கொண்டதின்பேரில் குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டது.